# தேசிய யுனானி மருத்துவ நிறுவனம்
# (NIUM)

(மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம்)






**கோட்டிகபாளையா, மாகடி ரோடு, பெங்களுரு. 560091**
அலைபேசி எண்: 080-23584260 www.nium.in

தேசிய யுனானி மருத்துவ நிறுவனம், (NIUM) பெங்களூரு. மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் நிர்வகிக்கும் ஒரு சுயாட்சி நிர்வாகம், 1985-ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, 2004- ஆம் ஆண்டு முதல் யுனானி மருத்துவ முறையில் முதுகலை கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான முதன்மை நிறுவனமாக விளங்குகிறது.

**நோக்கங்கள்:**

- யுனானி மருத்துவ முறையின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- யுனானி மருத்துவத்தில் முதுகலை படிப்புகளை வழங்குதல்.
- சிறந்த மருத்துவர் மற்றும் ஆராய்ச்சியாளர்களை உருவாக்குதல்
- யுனானி மருத்துவத்தின் பல துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்வது.
- யுனானி மருத்துவம் மூலம் மருத்துவ சேவைகளை வழங்குவது.

**கற்பித்தலும் ஆராய்ச்சி திட்டமும்:**

இந்த கழகத்தில் ஆண்டுதோறும் செப்டம்பர் / அக்டோபர் மாதங்களில் நடைபெறும் தேர்வுகளின் அடிப்படையில் மூன்று வருட முதுகலை மருத்துவ / அறுவை சிகிச்சை பட்டப்படிப்புகளுக்காக மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. இக்கழகம் NCISM வழிகாட்டுதலின்படி, ராஜீவ் காந்தி ஹெல்த் யுனிவர்சிட்டியின் கீழ் செயல்படுகிறது.

**வழங்கப்படும் முதுகலை பட்ட படிப்புகள்:**

1. முவாலஜாத் (Moalajat - Medicine)
2. தஹபுஸி-வ-சமாஜி திப் (Tahaffuzi wa Samaji Tib- PSM)
3. இல்முல் ஸஜ்த்லா (Ilmul Saidla- Pharmacy)
4. இலாஜ் பித் தத்பீர் (Ilaj Bit Tadbeer – Regimenal Therapy)
5. இல்முல் அத்வியா (Ilmul Advia - Pharmacology)
6. இல்முல் கபாலத்-வ-அம்ராஸ் நிஸ்வான் (Ilmul Qabalat wa Amraz-e-Niswan – Obs & Gyn)
7. குல்லியாத்-வ-உமூர் தபிய்யா (Kulliyat Umoore Tabiya – Principle of Unani Medicine)
8. ஜராஹியாத் (Jarahiyat- Surgery)
9. அம்ராஸ் ஜில்த்-வ-தஸீனியாத் (Amraze Jild wa Tazeeniyat – Derma and Cosmetology)
10. மாஹியத்துல் அம்ராஸ் (Mahiyath ul Amraz - Pathology)

**முனைவர் பட்டம் (Ph.D) –**

முவாலஜாத் (Moalajat - Medicine), தஹபுஸி-வ-சமாஜி திப் (Tahaffuzi wa Samaji Tib- PSM) இல்முல் கபாலத்-வ-அம்ராஸ் நிஸ்வான் (Ilmul Qabalat wa Amraz-e-Niswan – Obs & Gyn) மற்றும் இல்முல் அத்வியா (Ilmul Advia- Pharmacology)

**உள்ளமைப்பு வசதிகள்:**

இவ்வளாகத்தில் கல்வி கட்டிடம், மருத்துவமனை கட்டிடம், நூலகம், மருந்தகம், நிர்வாக கட்டிடம், மூலிகை தோட்டம். விலங்குகள் ஆராய்ச்சி கூடாரம் (Animal House), மாணவர் விடுதி (ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனி) உள்ளரங்க விளையாட்டு அரங்கம், குடியிருப்பு கட்டிடங்கள், மாநாட்டரங்கம் மற்றும் விருந்தினர் மாளிகை உள்ளது.

**நூலகம்:**

இங்குள்ள நூலகத்தில்12000-க்கும் மேற்பட்ட புத்தகங்கள், அரிய கையெழுத்துப் பிரதிகள், அதிவேக இணைய வசதி மின்னனு வளங்கள், மின்னனு இதழ்கள் மற்றும் மின்னனு புத்தகங்கள் உள்ளன.

**ஆராய்சி வசதிகள்:**

இங்குள்ள அய்வு கூடாரத்தில் மைய கருவி வசதி (Central Instrumentation Facility), அணு உறிஞ்சு நிறமாலை,(Atomic Absorption Spectrometer) நுண்ணிலை செரிமான அமைப்பு, (Microwave Digestion System) சுழல் இயக்கி (Rotary Operator), மருந்துப்பொருளியல் ஆய்வகம் (Pharmacognosy Lab), மருந்து தரநிர்ணய ஆய்வகம் (Drug Standardization Laboratory), மருந்தியல் மற்றும் மருந்தக ஆய்வகம் (Pharmacology and Pharmacy Lab) உள்ளது.

**மூலிகை தோட்டம்:**

150-க்கும் மேற்பட்ட மருத்துவ மூலிகைகள் உள்ளது.

**மருத்துவமனை அமைப்பு:**

- வெளிநோயாளர் பிரிவு (OPD)
- 180 படுக்கைகள் கொண்ட உள்நோயாளர் பிரிவு (IPD) (ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனி)

**வெளிநோயாளர் பிரிவுகள் (OPD) மற்றும் பிறசேவைகள்**

1. பொது மருத்துவம் (General Unani Medicine OPD)
2. பெண்கள் மருத்துவம் (OBG OPD)
3. அறுவை சிகிச்சை - (Surgery OPD)
4. காது, மூக்கு தொண்டை (ENT OPD)
5. பல் மருத்துவம் (Dental OPD)
6. கண் மருத்துவம் (Ophthalmic OPD)
7. குழந்தை மருத்துவம் (Paediatric OPD)
8. தோல் மருத்துவம் (Skin and Cosmetology)
9. சமூக மருத்துவம் (Community Medicine)
10. எலும்பு மற்றும் தசை நோய்கள் (Musculoskeletal Disorders)
11. நரம்பியல் நோய்கள் (Neurological Disorders)
12. குடல் மற்றும் கல்லீரல் நோய்கள் (Gastroenterology and Liver Diseases)
13. முதியோர் மருத்துவம் (Geriatric Care)
14. மனநல நோய்கள் (Psychiatric Disorders)
15. குடும்பக் கட்டுப்பாடு (Family Planning)
16. நீரிழிவு (Diabetes)
17. உடல் பருமன் (Obesity)
18. பாலியல் நோய்கள் (Sexual Diseases)

**இலாஜ் பித் தத்பீர் துறை (Rgimenal Therapy Unit)**

1. மசாஜ் (Massage)
2. அட்டையிடுதல் (Leeching)
3. நுதூல் (Irrigation)
4. ஹிஜாமா (Hijama / Cupping)
5. நீராவி குளியல் (Steam Bath)
6. தக்மீத் (Hot Fomentation)
7. ஹமாம் (Turkish Bath)
8. பஸத் (Venesection)
9. ரியாஸத் (Exercise)
10. ஆப்சன் (Sitz Bath)

**தடுப்பூசி:**

காசநோய் (BCG), பேலியோ (OPV), டிப்தீரியா, பெர்ட்டுசிஸ், டெட்டனஸ் (DTP தடுப்பூசி, ஹெபடைடிஸ் (HBV), தட்டம்மை (Measles).

**நோயறிதல் பிரிவு:**

- நோயியல் மற்றும் உயிர்வேதியியல் ஆய்வகம் (Pathology and Biochemistry),
- கதிரியக்கவியல்: எக்ஸ்-ரே மற்றும் அல்ட்ராசவுண்ட் (Radiology: X-ray and Ultrasonography),
- இதயவியல் : இசிஜி (ECG), எக்கோகார்டியோகிராபி (Echocardiography), TMT, அதெரோவின் (Atherowin), பெரிஸ்கோப் (Periscope), கான்வின் (Canwin) மற்றும் ஸ்பைரோவின் (Spirowin).

**மருந்தகம்:**

பல்வேறு வடிவங்களில் கூட்டு மருந்துகளை தயாரிக்கும் முழுமையாக அமைக்கப்பட்ட மருந்தகம்.

**பொது வார்டுகள்:**

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனி பொது வார்டுகள்.

**சிறப்பு வார்டுகள் மற்றும் ஆரோக்கிய கூடங்கள்:**

தினசரி கட்டணத்திற்கு சிறப்பு வார்டுகள் மற்றும் ஆரோக்கிய கூடங்கள் கிடைக்கின்றன.

**மகப்பேறு பிரிவு:**

- விசாலமான பிரசவ அறை கொண்ட நன்கு அமைக்கப்பட்ட மகப்பேறு பிரிவு
- பெண்கள் மற்றும் மகப்பேறு தொடர்பான சிக்ச்சைகளுக்கு மட்டுமே இணைக்கப்பட்ட அறுவை சிகிச்சை அறை.

**அறுவை சிகிச்சை அறை:**

- நன்கு அமைக்கப்பட்ட அறுவை சிகிச்சை அறை,
- இலவசமாக சிறிய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுகின்றன.

**பிற செயல்பாடுகள்:**

- வாரந்திர ஆரோக்கிய விழிப்புணர்வு திட்டம் ஏற்பாடு செய்தல்,
- BPL போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் வழக்கமான இலவச மருத்துவ முகாம் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்தல்.
- யுனானி ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு அவ்வப்போது மறுபயிற்சி நிரல் (Re-orientation programme) மருத்துவப் பட்டமேற்படிப்பு திட்டம் (CME Programs) ஏற்பாடு செய்தல்.
- கருத்தரங்குகள், மாநாடுகள் ஏற்பாடு செய்தல்.

**எதிர்கால திட்டங்கள்:**

- பிற துறைகளில் முதுகலை படிப்புகள் தொடங்குதல்.
- பிற துறைகளில் முனைவர் பட்டப் படிப்புகளை (PhD) தொடங்குதல்.